# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.4 (L.W.8)

| | | | |
|---|---|---|---|
| Name | : Ashokkumar | Caste | : S.C. |
| Father's Name | : தாஸ்குமார் | Calling | : கூலி வேலை |
| Village | : RS நகர் | Religion | : இந்து |
| Taluk | : குடியாத்தம் | Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.12.2024.

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்து போன சூரியாவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 முதல் அ.சா.3 வரை தெரியும். 08.01.2019 அன்று இரவு 8.45 மணிக்கு நானும், முரளி என்பவரும் எங்கள் ஊருக்கு வரும்போது, சத்தியா நகர் சந்திப்பில் போலிசார் மற்றும் ஜனங்கள் கூட்டமாக இருந்தார்கள். நானும், முரளியும் போய் பார்க்கும்போது எங்களை கொலை வழக்கில் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். நாங்களும் ஒப்புக்கொண்டோம். அந்த இடத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தை தான் போலிசார் வரைந்தார்கள்.

அதை தொடர்ந்து சம்பவ இடத்தினை பார்த்து எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் முரளி உடையது. 2 வது கையொப்பம் என்னுடையது. பார்வை மகசர் அ.சா.ஆ.2.

சம்பவ இடத்தில் எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் இரத்தம் படியாத ஒரு கைப்பிடி மண் சா.பொ.5, இரத்தம் படிந்த ஒரு கைப்பிடி மண் சா.பொ.6, அந்த இடத்திலிருந்து TVS XL TN–23–AU–5551 என்ற வண்டி, அந்த இடத்திலிருந்த அ.சா.1 ன் கிழிந்து போன டீ சர்ட் மற்றும் ஒரு ஜோடி புளு கலர் செப்பல் சா.பொ.7 ஆகியவற்றை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நானும், முரளியும் சாட்சி கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சா.பொ.5 முதல் 7 ஐ பொறுத்து அது மூடி முத்திரையிடப்பட்ட உறையில் இல்லை என்பது பொறுத்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே குறியீடப்பட்டது. அதை பொறுத்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்). இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். 8 வது வரை படித்துள்ளேன். இதற்கு முன்பு நீதிமன்றத்தில் எந்த வழக்கிலும் சாட்சியம் அளிக்கவில்லை. நான் முரளி என்பவரிடம் வேலை

செய்யவில்லை. அவர் வெல்டிங் வேலை செய்கிறார். நானும், அவரும் ஒரே பில்டிங்கில் நான் கொத்தனாராகவும், அவர் வெல்டிங் வேலையும் செய்கிறோம். நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்.

நான் சத்தியா நகர் சென்றேன் என்ற சொல்லி உள்ள நிலையில் போலிஸ் வாக்குமூலத்திலோ, முதல் விசாரணையிலோ என்ன காரணத்திற்காக சத்தியா நகர் சென்றேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டிற்கு வந்த வழியாக செல்லவேண்டும் என சொல்லி உள்ளேன். அதை பொறுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த வாகனத்தில் அந்த பகுதிக்கு சென்றேன் என்பதையும் நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் என்னிடம் கேட்கவில்லை.

என்னுடைய முதல் விசாரணையில் 8.45 மணிக்கு சத்தியா நகர் பக்கம் சென்றதாக சொல்லி உள்ளேன். ஆனால் கைப்பற்றுதல் மகசரில் இரவு 10.15 மணி என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசரில் சம்பவ இடத்தில் செருப்பு இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது. போலிசார் தயார் செய்ததில் நான் கையொப்பம் தான் போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இருந்தேன். போலிசார் விசாரணை செய்தார்கள்.

08.01.2019 ம் தேதி இறந்து போன சூரியாவை நான் பார்க்கவே இல்லை. அதனால் இறந்து போன சூரியா எந்த மாதிரியான செருப்பு அணிந்திருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலிசார் செருப்பை கைப்பற்றினார்கள்.

போலிசார் வாக்குமூலத்தில் சான்று பொருட்களை யார் அடையாளம் காட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. பார்வை மகசரில் கீழே உள்ள தேதி கையால் 8 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் மாதத்தை பொறுத்து திருத்தம் செய்யப்பட்டு, மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணத்தில் பின்பக்கம் உள்ள தேதியும் முழுமையாக அடிக்கப்பட்டுள்ளது.

போலிசார் சம்பவ இடத்தில் என்னை விசாரித்தபோதே என்னுடைய வாக்குமூலத்தை பதிந்துக் கொண்டார்கள். நான் 2 முறை கையொப்பம் செய்தேன். சம்பவ இடத்தில் விசாரித்த பின்னர் போலிசார் என்னை மீண்டும் விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும், போலிசார் என் முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. ராசி நகர் to சக்திநகர் செல்லும் சாலை தார் சாலை.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.17 18:22:22 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.5 (L.W.10)

| | | | |
|---|---|---|---|
| Name | : அதியமான் | Caste | : S.C. |
| Father's Name | : அண்ணாதுரைசாமி | Calling | : Lab Technician |
| Village | : R.S. நகர் | Religion | : இந்து |
| Taluk | : குடியாத்தம் | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.12.2024.

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் லேப் டெக்னிசியனாக பணியாற்றுகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 முதல் அ.சா.4 வரை தெரியும். இவ்வழக்கில் இறந்து போன சூரியாவை தெரியும். 10.01.2019 ம் தேதி நானும், என்னுடைய நண்பர் ராஜேஷ் ஆகியோர் காலை 6 மணிக்கு செதுக்கரை மலையடிவாரம் பக்கம் போய்க் கொண்டு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் ராஜாவும், ரமேஷ்–ம் போலிசார் பிடித்துக் கொண்டு விசாரித்துக் கொண்டு இருந்தார்கள். விசாரிக்கும்போது நாங்கள் கிட்டே போய் பார்த்தோம். போலிசார் சாட்சியாக எங்களை இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஆஜர் முதல் எதிரி ரமேஷ்–ஐ போலிசார் விசாரித்தார்கள். 1ம் எதிரி வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும், ராஜேஷ்–ம் சாட்சி கையெழுத்து போட்டோம். அதே போல் 2ம் எதிரி ராஜாவிடம் போலிசார் வாக்குமூலம் பதிந்தார்கள். அதில் நானும், ராஜேஷ்–ம் சாட்சி கையெழுத்து போட்டோம். மேற்படி 2 எதிரிகளும் வெட்டுக்கத்தியை Scooty Zest வண்டியில் சீட்டுக்கு பின்புறம் வைத்திருந்ததாக சொன்னார்கள். பின்னர் 2 எதிரிகளும் அந்த வெட்டுக்கத்தியை போலிசாரிடம் கொடுத்து ஆஜர் செய்தார்கள். அது இரும்பு கைப்பிடி போட்ட வெட்டுக் கத்தியாகும். அந்த கத்தியை அடையாளம் காட்ட இயலும். வழக்கு சொத்தாக உள்ள சா.பொ.4 கத்தியை சாட்சியிடம் காட்டியபோது அதை பார்த்து சாட்சி அடையாளம் காட்டுகிறார். அந்த கத்தியை எதிரி எடுத்து ஆஜர் செய்தபோது அதில் இரத்தக்கறை இருந்தது. அதை போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள். அந்த மகசரில் நானும், ராஜேஷ்ம் கையெழுத்து செய்தோம்.

ஆஜர் முதல் எதிரி அப்போது உடுத்தியிருந்த மெருன் கலர் வெள்ளை நிற புள்ளி போட்ட சட்டை சா.பொ.8, புளு கலர் ஜீன்ஸ் பேண்ட் சா.பொ.9. மேலும் 1ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சட்டை சா.பொ.10. அது இரண்டிலும் இரத்தக்கறை காணப்பட்டது. ஆஜர் 2ம் எதிரியிடம் இருந்து சந்தன கலர் சட்டை கைப்பற்றப்பட்டது. அவர் வைத்திருந்த Scooty Zest வாகனத்தை போலிசார் கைப்பற்றினார்கள். வழக்கு சொத்தாக உள்ள Scooty Zest ஐ சாட்சி பார்த்து அடையாளம் காட்டினார். 2ம் எதிரியிடம் கைப்பற்றிய சந்தன

கலர் சட்டை சா.பொ.11. மேற்படி 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "வெட்டுக்கத்தி மட்டும் தங்களிடம் ஒப்படைத்தேன்" என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 அவ்வாறே 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "வெட்டுக்கத்தி மட்டும் தங்களிடம் ஒப்படைத்தேன்" என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. மேற்படி சொத்துக்களை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர்கள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7. அதில் நானும், ராஜேஷ்ம் கையெழுத்து செய்தோம். (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சா.பொ.8 முதல் 11ஐ பொறுத்து அது மூடி முத்திரையிடப்பட்ட உறையில் இல்லை என்பது பொறுத்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே குறியீடப்பட்டது. அதை பொறுத்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்). இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய போலிஸ் வாக்குமூலத்தில் 10.1.2019ம் தேதி காலை 6 மணிக்கு எதற்காக நான் செதுக்கரைக்கு மலைக்கு சென்றேன் என்பதை சொல்லவில்லை. ஆனால் செதுக்கரை மலை அடிவாரத்தில் என் மாமா வீடு உள்ளது. மாமா வீட்டிற்கு சென்றதாக சொல்லவில்லை. செதுக்கரை மலை பள்ளிகொண்டாவிலிருந்து குடியாத்தம் செல்லும் வழியில் சுமார் 7 கிமீ பரப்பளவில் உள்ளது.

என்னுடைய போலிஸ் வாக்குமூலத்தில் மலையடிவாரத்தில் எந்த திசையில் உள்ள பகுதிக்கு நான் சென்றேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. அவ்வாறு எதிரிகள் எந்த பகுதி மற்றும் திசையில் இருந்தார்கள் என்பதை போலிஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் அந்த வழியாக சென்றபோது எதிரிகளும், போலிசாரும் செதுக்கரை ஜீவா நகரில் இருந்தார்கள். என்னுடைய போலிஸ் வாக்குமூலத்தில் எதிரிகளும், போலிசாரும் செதுக்கரை ஜீவா நகரில் இருந்ததாக சொல்லவில்லை என்றும், தற்போது முதன்முறையாக சொல்வதால் அதை பொறுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் முன்பு போலிசார் சா.பொ.8 முதல் சா.பொ.11 வரை கைப்பற்றியதாக நான் சொல்லிய நிலையில் அது எந்த வழக்கில் கைப்பற்றினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வாக்குமூலத்தை படித்துப்ப பார்த்து தான் கையொப்பம் போட்டேன். கைப்பற்றுதல் மகசரில் அ.சா.ஆ.6 ல் நேரம் 8.30 மணி என்று போடப்பட்டுள்ளது. அந்த நேரத்தை வெள்ளை அழிப்பான் போடப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தின் கீழே சட்டை என்ற ஆவணத்திற்கு கீழே முழுக்கை என்று இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்திலோ, நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலோ கத்தியின் நீளம், அகலம் மற்றும் கனத்தை பற்றி சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் சா.பொ.4 ல்

இரத்தக்கறை ஏதும் தென்படவில்லை. நான் செதுக்கரை பக்கம் போகவில்லை, எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றும், என் முன்னிலையில் சான்று பொருட்களை கைப்பற்றவில்லலை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், முதல் விசாரணையில் நான் சொன்ன சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொண்டு, மேலும் குறுக்கு விசாரணை

2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரில் நேரத்தை பொறுத்து காலை 8.45 என்பதை வெள்ளை அழிப்பான் போட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறே சான்று பொரு'ள அடையாளம் குறிக்கும் இடத்தில் கத்திரிப்பூ கலர் என்ற இடத்தில் மாற்றி எழுதப்பட்டுள்ளது. அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்களில் இரண்டு நபர் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். அவ்வாறே கடைசியாக சந்தன கலர் முழுக்கை சட்டை என எழுதி அதற்கு மேல் வெள்ளை அழிப்பான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் எதிரிகள் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலிசார் தயார் செய்த

ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.17 18:22:43 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.14 of 2020
Prosecution Witness No.P.W.6 (L.W.13)

| | | | |
|---|---|---|---|
| Name | : தாமோதரன் | Caste | : B.C. |
| Father's Name | : V.N.ஆறுமுகம் | Calling | : Tasmark |
| Village | : குடியாத்தம் | Religion | : Hindu |
| Taluk | : குடியாத்தம் | Age | : 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.12.2024.

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் குடியாத்தம் நியுடவுன் பார்க்கில் உள்ள டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தான். 08.01.2019 ம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு ஆஜர் எதிரிகள் வந்து மதுபாட்டில்கள் வாங்கி சென்று, ரமேஷ், ராஜா, சூரியா ஆகியோர்கள் எங்கள் கடையில் உள்ள திறந்த வெளியில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அங்கு மது அருந்துபவர்கள் 3 பேர் தகராறு செய்வதாக வாடிக்கையாளர்கள் என்னிடம் சொன்னார்கள். அதன்பிறகு அங்கிருந்து அனைவரும் சென்றுவிட்டனர். அதன்பிறகு சூரியா என்ற நபர் சண்டையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள், தெரிந்துக் கொண்டேன். அன்று

இரவு 9 மணிக்கு கேள்விப்பட்டு, வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய சொந்த ஊர் குடியாத்தம். 1ம் எதிரி எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. என்னுடைய போலிஸ் வாக்குமூலத்தில் யார் எவ்வளவு ரூபாய் கொடுத்த என்ன மதுவாங்கி சென்றார்கள் என நான் சொல்லவில்லை. ஒருநாளைக்கு எங்கள் கடையில் 1000க்கும் மேற்பட்ட நபர்கள் வருவார்கள். என்னுடைய போலிஸ் விசாரணையில் தகராறு நடந்துக் கொண்டிருப்பது பற்றி கஸ்டர் தான் என்னிடம் சொன்னார் என்பதை சொல்லவில்லை. அந்த கஸ்டமர் பெயரை நான் சொல்லவில்லை. இந்த டாஸ்மார்க் கடையிடம் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரிதான். தொலைவில் நடந்தது. போலிசார் என்னை 08.01.2019 அன்றே கடையிடம் என்னை விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள். ஆனால் வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை. சம்பவம் கேள்விப்பட்டது தொடர்பாக நான் காவல் நிலையத்திற்கோ, என்னுடைய மேலதிகாரிக்கோ தகவல் கொடுக்கவில்லை. என்னை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், சம்பவம் நடந்ததாக நான் கேள்விப்பட்டது பொய் என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொண்டு மேலும் குறுக்கு விசாரணை

நான் டாஸ்மார்க் கடையில் வேலை செய்வதற்கு எனக்கு அடையாள அட்டை கொடுப்பார்கள். அதை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை. என்னை போலிசார் விசாரணை தான் செய்தார்கள். ராஜா, ரமேஷ், சூரியா ஆகியோர் யார் என்று எனக்கு தெரியாது என்றாலும், போலிசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2024.12.17 18:22:55 +0530